TNTT070006632026

நீதித்துறை நடுவர் எண்– 2 நீதிமன்றம், கோவில்பட்டி.
முன்னிலை. திருமதி. M.மணிமேகலா, , M..A.,M.L.,
நீதித்துறை நடுவர் எண் – 2,
கோவில்பட்டி.
2026 ம் ஆண்டு பிப்ரவரி 12 ம் நாள் வியாழட்கிழமை

**Crl.M.P.No. 144/2026**

ராஜாராம்,
த/பெ. ராமகிருஷ்ணன். ... மனுதாரர்

/எதிர்/

காவல் உதவி ஆய்வாளர்,
கோவில்பட்டி மேற்கு காவல் நிலையம்,
கு.எண். 608/25 ... குற்றமுறையீட்டாளர்/எதிர்மனுதாரர்

**உத்தரவு**

1. இந்த மனுவானது இந்த வழக்கில் பி.ஆர். எண். 706/2025 ல் ஆஜர் செய்யப்பட்டுள்ள TN 96 F 8989 என்ற எண் கொண்ட YAMAHA ZR இருசக்கர வாகனத்தை இடைக்காலமாக திரும்ப கோரி மனுதாரர் மனு தாக்கல் செய்துள்ளார்.

2. மேற்படி வாகனம் திறந்த வெளியில் நிற்பதால் இயற்கை சீற்றங்களான மழையினாலும், வெயிலினாலும், காற்றினாலும் அதன் உதிரி பாகங்கள் பாதிக்கப்பட்டு சேதமடையும் நிலை உள்ளதால் மேற்படி வாகனத்தை தன்னிடம் திரும்ப ஒப்படைத்தால் நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைகளுக்கு கட்டுப்படுவேன் என்றும் மேற்படி வாகனத்தை உருமாற்றம் செய்யவோ, விற்கவோ மாட்டேன் எனவே வாகனத்தை தன்னிடம் ஒப்படைக்க வேண்டுமென்றும் மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

3. எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பி பதில் பெறப்பட்டது. வழக்கின் சொத்தை நீதிமன்றத்தில் பி.ஆர்.706/25 ஆக பெறப்பட்ட TN 96 F 8989 என்ற இரு சக்கர வாகனம் கோவில்பட்டி மேற்கு காவல் நிலைய பாதுகாப்பில் இருந்து வருகிறது என்றும், மேலும் வாகனத்தை திரும்ப ஒப்படைத்தால் மீண்டும் குற்ற செயல்களில் ஈடுபடுவார் என்றும், எனவே வாகனத்தை ஒப்படைக்க ஆட்சேபனை செய்யப்பட்டது.

4. இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. மேற்படி வாகனத்தை காவல் நிலைய பொறுப்பில் வைத்திருப்பதால் அதன் நுண்ணிய பாகங்கள் பழுதடைய கூடும் என்பதாலும், **வழக்கின் சூழ்நிலையை கருத்தில் கொண்டும், மனுதாரார் தானும் தனக்காக ஒரு நபரும் ரூ. 50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) பிணைமுறியை எழுதி கொடுக்கும் பட்சத்திலும் கீழ்க்கண்ட நிபந்தனைகளுடனும்** மேற்படி வாகனத்தை மனுதாரரிடம் இடைக்காலமாக ஒப்படைக்க இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. மனுதாரர் மேற்படி வாகனத்தின் உருவத்தையோ, அமைப்பையோ மாற்றக்கூடாது. மனுதாரர் வாகனத்தினை அடமானம் வைக்கவோ கூடாது என்று உத்தரவிடப்படுகிறது

2. மனுதாரர் மேற்படி வாகனத்தின் ஆர்சி புத்தகத்தின் அசலை இந்நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய வேண்டும்.

3. மனுதாரர் மேற்படி வாகனத்தின் போட்டோ மற்றும் சிடி இந்நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும்.

4. போட்டோ மற்றும் சிடிக்கான பிரிவு 63 BSA ன் சான்றிதழ் தாக்கல் செய்ய வேண்டும்.

5. மனுதாரர் வழக்கின் முடிவுக்கு கட்டுப்பட வேண்டும்.

6. இவ்வழக்கில் கைப்பற்றுதல் நடவடிக்கை ஏதேனும் உத்தரவிடும்பட்சத்தில் அதற்கு கட்டுப்பட வேண்டும். அதற்கான பிரமாண பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும்.

7. வழக்கு சொத்தை வழக்கின் விசாரணைக்கு வேண்டும் போது ஆஜர் செய்யப்பட வேண்டும்.

8. தலைமை எழுத்தர் பஞ்சநாமா தயார் செய்யவும், அதில் மனுதாரரும், தலைமை எழுத்தரும் கையொப்பம் செய்யவும் மற்றும் வாகனத்தின் புகைப்பட நகலையும் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது.

இறுதியாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் திருத்தப்பட்டு 2026 ஆண்டு பிப்ரவரி மாதம் 12ம் தேதி அன்று திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MANIMEGALA

Digitally signed by MANIMEGALA
Date: 2026.02.12 22:25:05 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
கோவில்பட்டி.